இறைத்தூதன்
கத்தோலிக்க வார இதழ்

"இறைஅழைத்தல்கள் என்பது நிறுவன திட்டமிடல்களாலோ அல்லது கவனமாக வடிவமைக்கப்பட்ட பிரச்சாரங்களாலோ பிறப்பது அல்ல. மாறாக, அவை செபம், நற்செய்தியோடு கொண்டிருக்கும் நெருக்கம், அமைதி, ஒருவரையொருவர் குறைகளோடு ஏற்றுக்கொள்ளும் மனப்பக்குவம் மற்றும் அனைவரையும் ஒன்றாக இணைக்கும் ஆன்மீக உணர்விலிருந்தே பிறக்கின்றன," என்று திருத்தந்தை கூறினார்.

மலேசிய மேய்ப்புப்பணி மாநாடு 2026-யில் கலந்துக் கொண்ட பங்கேற்பாளர்களின் கருத்துத் துளிகள்

குடும்பத்தில் அவ்வபோது தாக்கும் சோதனைகளை எதிர்கொள்ள 'அமைதி' கருவியாக பயன்படுகிறது. இயேசு ஆண்டவர் அமைதியில் சோதனைகளை மேற்கொண்டது போல, கடவுளது திட்டத்தை அறிய இவ்வமைதி நமக்கு தேவையாயிருக்கிறது. சோதனைகளின் போது இறை திட்டத்தை அறிவதுதான் சிறந்தது என பகிர்ந்துக்கொண்டோம். கத்தோலிக்கர்களிடையே காணப்படுகிறது உறவு, வாழ்க்கை முறை பிற சமய சகோதர சகோதரிகளிடையே பெரிய தாக்கத்தை ஏற்படுத்தும். இவ்வாறாக இறை நற்செய்தியாளராக முடியும். பெற்றோர்கள் குறித்து பேசும் போது அநேக பெற்றோர்கள் மறைக்கல்வி வகுப்புக்கு தனது பிள்ளைகளை அனுப்புவதில் மட்டுமே கவனம் செலுத்துகிறார்கள், அவர்கள் என்ன கற்றுக்கொண்டார்கள் என்பதை பற்றி அவர்களிடம் கேட்பது மிகக் குறைவு. பிள்ளைகளின் விசுவாச வாழ்க்கையைப் குறித்த அக்கறையின்மை மிகவும் வருத்தமடைய வைக்கிறது. எனவும் பகிர்ந்துக்கொண்டோம். – ரோன் சில்வராஜ், அலோர் ஸ்டார் புனித மிக்கேல் தேவாலயம்.



அன்பும் அரவணைப்பும் குடும்பத்திலிருந்துதான் தொடங்குகிறது. குடும்பத்திலிருந்துதான் திரு அவை உருவாகுகிறது. ஆனால் இன்று திரு அவையில் நடக்கிற பல சம்பவங்கள் கடவுளின் அன்பிலிருந்து விலகுவதாக உணரவைக்கிறது. கலாச்சாரத்திற்கு கொடுக்கிற முக்கியத்துவம் பல நேரங்களில் எல்லை மீறி, சடங்கு, விக்கிரக ஆராதனை போன்ற காரியங்களுக்கு வழி வகுப்பது போல தோற்றமளிக்கிறது. ஒரு காலத்தில் கத்தோலிக்கர்களைப் பார்த்து மனம் மாறி இயேசுவைச் சொந்த மீட்பராக பல பிற மதத்தினர் ஏற்றுக் கொண்டனர். இன்று நாம் கடைப்பிடிக்கும் கலாச்சாரங்களால் நம்பிக்கை அல்லாதவருக்கும் நம்பிக்கையாளரான நமக்கும் வேறுபாடில்லா சூழ்நிலை நிலவுகிறது. வரும் காலத்தில் நமது பிள்ளைகளுக்கு இது பெறும் சவாலாக அவையும் என்பதில் சந்தேகமில்லை. சாதாரண ஆராத்தியில் துவங்கி கும்ப ஆராத்தியுடன், விசுவாசத்திற்கு எதிரான சடங்குகள் கிறிஸ்துவமாக மாற்றப்பட்டு கடைப்பிடிக்கப்படுகின்றன. புற்று நோயாக வளரும் இத்தகைய நடவடிக்கைகள் வேரோடு புடுங்கி எறியப்பட வேண்டும். – லோரன்ஸ் அல்போன்சோ, நிபோங் தெபால் புனித அந்தோனியார் தேவாலயம்.



இன்றைய காலகட்டத்தில் குடும்பங்களுக்குள் தனிப்பட்ட தொடர்பு குறைந்து வருவது பலராலும் சுட்டிக்காட்டப்பட்டது. கைப்பேசி, இணையம் மற்றும் சமூக ஊடகங்கள் நம்மை உலகத்துடன் இணைத்தாலும், சில நேரங்களில் அவையே நம்முடன் இருப்பவர்களிடமிருந்து நம்மை விலக்கிவிடுகின்றன. ஒரே வீட்டில் இருக்கும் குடும்ப உறுப்பினர்கள் கூட தங்களுடைய கைப்பேசிகளில் அதிக நேரம் செலவிடுவதால், ஒருவரோடு

"இறைஅழைத்தல்கள் சமூகத்தின் செபத்திலிருந்தே பிறக்கின்றன"



இத்தாலியிலுள்ள கப்புச்சின் ஏழை கிளாரியட் (Capuchin Poor Clare) அருட்சகோதரிகளுக்கு, தங்களது துறவற வாழ்வில் ஆயுள் முழுவதற்குமான பயிற்சியைத் தொடரவும், செபம் மற்றும் விருந்தோம்பல் வழியே உலகில் நற்செய்தியைப் பரப்பவும் திருத்தந்தை லியோ XIV ஊக்கம் அளித்துள்ளார்.

இத்தாலியின் ஏழை கிளாரியட் அருட்சகோதரிகளின் கூட்டமைப்பைச் சேர்ந்த பிரதிநிதிகளை திங்கள்கிழமை அன்று திருத்தந்தை லியோ XIV சந்தித்துப் பேசினார்.

கிறிஸ்தவர்கள் தங்களது இறைஅழைப்பிற்கு "ஏற்ற வாழ்க்கை வாழ வேண்டும்" என்ற தூய பவுலின் அழைப்பை நினைவுகூர்ந்த திருத்தந்தை, தியானச் செபம், வறுமை மற்றும் நற்செய்திக்கு தங்களை முழுமையாக ஒப்படைத்தல் ஆகியவற்றின் மூலம் உண்மையுள்ளவர்களாய் வாழ அவர்களுக்கு ஊக்கமளித்தார்.

செபத்தில் இறைவனோடு இடைவிடாத ஒன்றிப்பை அடைவதே துறவறச் சகோதரிகளின் கடமை என்பதை மீண்டும் உறுதிப்படுத்தும் வகையிலான அவர்களின் சட்டப் புத்தக (Constitutions) திருத்தப் பணிகளை அவர் பாராட்டினார்.

போஹீமியாவின் தூய ஆக்னசுக்கு, தூய கிளாரியம்மாள் எழுதிய கடிதத்தைச் சுட்டிக்காட்டிய திருத்தந்தை, கன்னியர்கள் தங்களது "மனதை நித்தியத்தின் கண்ணாடிக்கு முன்பாக வைக்க வேண்டும்" என்றும், மடத்தின் சுவர்களைத் தாண்டியும், இன்றைய உலகத் துன்பங்களைத் தாண்டியும் எதிர்காலத்தை நம்பிக்கையோடு நோக்க வேண்டும் என்றும் கூறினார்.

துறவற இறைஅழைத்தல்கள் குறைந்து வருவது, சில துறவறச் சமூகங்களை தங்களுக்குள்ளேயே சுருங்கிப்போகச் செய்யக்கூடும் என்று குறிப்பிட்ட திருத்தந்தை, அதேவேளையில் இந்த சவால்கள், திருஅவை தான் வழங்கக்கூடிய ஆன்மீகப் பணியின் "தரத்தை" மீண்டும் கண்டடைவதற்கான ஒரு வாய்ப்பாக மாறக்கூடும் என்றும் கூறினார்.

மடங்களில் துறவிகளின் எண்ணிக்கை குறைவது குறித்து அவர் கூறுகையில், "இது உங்கள் வாழ்க்கைமுறையைப் புதுப்பிக்கவும், மடங்களின் கதவுகளைத் தட்டுபவர்களுக்கு ஆன்மீக வழிகாட்டுதல் வழங்க அதிக அக்கறை காட்டவும தூண்ட வேண்டும். இறைவனுடன் நெருக்கம், இரக்கம், ஒற்றுமை மற்றும் உண்மையான நல்லுறவுகளை மக்கள் அனுபவிக்கக்கூடிய ஒரு மகிழ்ச்சியான, உயிரோட்டமுள்ள ஆன்மீகச் சமூகங்களை வளர்க்க இது உதவ வேண்டும்" எனறார்.

கடவுள் நம்மிடம் குறைகளற்ற பூரணத்துவத்தைக் கேட்கவில்லை; மாறாக தாழ்ச்சியோடு அவரது அருளுக்கு நம்மை உட்படுத்துவதையே எதிர்பார்க்கிறார் என்று அவர் கூறினார்.

"இறைஅழைத்தல்கள் என்பது நிறுவன திட்டமிடல்களாலோ அல்லது கவனமாக வடிவமைக்கப்பட்ட பிரச்சாரங்களாலோ பிறப்பது அல்ல. மாறாக, அவை செபம், நற்செய்தியோடு கொண்டிருக்கும் நெருக்கம், அமைதி, ஒருவரையொருவர் குறைகளோடு ஏற்றுக்கொள்ளும் மனப்பக்குவம் மற்றும் அனைவரையும் ஒன்றாக இணைக்கும் ஆன்மீக உணர்விலிருந்தே பிறக்கின்றன," என்று திருத்தந்தை கூறினார்.

தமிழாக்கம் ஹெரால்டு

சொமாலியாவில் நிலவும் மனிதாபிமான நெருக்கடி முடிவுக்கு வர திருத்தந்தை செபம்

சொமாலியாவின் சில பகுதிகளில் வன்முறைகள் முடிவுக்கு வரவும், அங்கு தொடர்ந்து நிலவி வரும் மனிதாபிமான நெருக்கடியில் மக்களுக்குத் தேவையான உதவிகள் கிடைக்கவும் திருத்தந்தை லியோ XIV செபித்துள்ளார்.

ஞாயிற்றுக்கிழமையன்று தூய பேதுரு சதுக்கத்தில் 'திரித்துவ செபத்தை' (Angelus) முன்னின்று நடத்திய போது, திருத்தந்தை லியோ XIV சொமாலியாவின் மனிதாபிமான சூழ்நிலையை நினைவுகூர்ந்தார்.

"சொமாலியாவின் சில பகுதிகளில் தீவிரமடைந்து வரும் மனிதாபிமான நெருக்கடியை நான் மிகுந்த கவலையோடு கவனித்து வருகிறேன். அங்கு நடக்கும் வன்முறைச் சம்பவங்களும், தீவிர காலநிலை மாற்றங்களும், ஏற்கனவே வறுமையில் வாடும் மக்களின் — குறிப்பாக பெண்கள் மற்றும் குழந்தைகளின் — சூழ்நிலையை மேலும் மோசமாக்கியுள்ளன" என்று அவர் கூறினார்.

"துன்புறும் நமது சகோதர சகோதரிகள் தங்களுக்குத் தேவையான உதவிகளைப் பெறும் வகையில், சர்வதேச சமூகம் தாராள மனதோடு முன்வந்து உதவ வேண்டும்" என்று திருத்தந்தை தனது விருப்பத்தை வெளிப்படுத்தினார்.

ஐக்கிய நாடுகள் சபையின் (UN) பல்வேறு முகமைகள், ஆப்பிரிக்க நாடான சொமாலியாவிற்கு வழங்கி வந்த மனிதாபிமான உதவிகளை சமீபத்திய மாதங்களில் கணிசமாகக் குறைத்துள்ளன.

ஏற்கனவே குறைக்கப்பட்ட வரவுசெலவுத் திட்டத்தில் (Budget) மூன்றில் ஒரு பங்கு நிதி மட்டுமே கிடைத்துள்ளதாக ஐ.நா.வின் மனிதாபிமான விவகாரங்களை ஒருங்கிணைக்கும் அலுவலகம் (OCHA) தெரிவித்துள்ளது.

ஐ.நா.வின் உலக உணவுத் திட்டமும் (WFP) தனது உணவு உதவிகளைக் குறைத்துள்ளது. 2026-ஆம் ஆண்டில் 20 லட்சம் மக்களுக்கு வழங்கப்பட்டு வந்த உதவி, தற்போது 6 லட்சமாகச் சரிந்துள்ளது.

2026-ஆம் ஆண்டில் அப்பகுதி முழுவதும் மழைப்பொழிவு இயல்பை விட மிகக் குறைவாக இருந்ததால், பல குடும்பங்கள் தங்களது கால்நடைகளுக்குத் தண்ணீர் தேடி வேறு இடங்களுக்கு இடம்பெயர்ந்து வருகின்றன.

சொமாலியாவின் மூடுக் (Mudug) பகுதியில் 70-க்கும் மேற்பட்ட மருத்துவ மையங்கள் மூடப்பட்டுள்ளதால், அங்கு ஊட்டச்சத்து குறைபாடு போக்கும் முதன்மை சுகாதார சேவைகளை மீண்டும் தொடங்கவும் விரிவுபடுத்தவும் உதவுமாறு 'எல்லையற்ற மருத்துவர்கள்' (MSF) அமைப்பு நன்கொடையாளர்களுக்கு அழைப்பு விடுத்துள்ளது.

1991-இல் முஹம்மது சியாத் பாரேவின் ஆட்சி வீழ்ச்சியடைந்ததிலிருந்து சொமாலியா உள்நாட்டு மோதல்களைச் சந்தித்து வருகிறது; மேலும் தீவிரவாத அமைப்புகளும் கிராமப்புறங்களில் தங்களது கட்டுப்பாட்டை வலுப்படுத்தியுள்ளன.

தமிழாக்கம் ஹெரால்டு

உடலின் மறைக்கல்வி (TOB) மூலம் நம்மைக் கண்டறிதல் - சாட்சியங்கள்

உடலின் மறைக்கல்வி (Theology of the Body - TOB) என்பது மனிதனின் அழகு, கண்ணியம் மற்றும் வாழ்வின் நோக்கத்தைப் புரிந்து கொள்ள நமக்கு உதவும் ஒரு போதனையாகும். இந்த முகாமின் (Camp) வழியாக நம்மைப் பற்றியும், நமது உறவுகளைப் பற்றியும், பிறரை நாம் எவ்வாறு பார்க்கிறோம் மற்றும் மதிக்கிறோம் என்பது பற்றியும் சிந்திக்க நாம் ஊக்கப்படுத்தப்படுகிறோம்.

கடந்த ஆகஸ்ட் 8, 9-ஆம் தேதிகளில், அருட்சகோதரி ரீத்தா மற்றும் அவரது குழுவினரால் இம்முகாம் வழிநடத்தப்பட்டது. இம்முகாமில் படிவம் 4 மாணவர்கள் கலந்துக் கொண்டனர்.

அவர்கள் ஒவ்வொருவருக்கும் இது ஒரு தனித்துவமான அனுபவமாக இருந்தது. முகாமிற்குப் பிறகு அவர்களின் எண்ணங்களையும் கருத்துகளையும் நம்மோடு பகிர்ந்து கொள்ளுமாறு கேட்டுக் கொண்டோம். அவர்கள் கூறியது இதோ:

"TOB முகாமின் மூலம் உண்மையான அன்பு என்றால் என்ன என்பதையும், ஒரு தூய்மையான உறவு என்றால் என்ன என்பதையும் நான் கற்றுக் கொண்டேன். மேலும், வாழ்க்கையின் உண்மையான அர்த்தத்தையும் நோக்கத்தையும் ஆழமாகப் புரிந்து கொண்டேன்.

எல்லாவற்றிற்கும் மேலாக, நமக்குத் பிடித்தவற்றைச் செய்வதில் மட்டும் உண்மையான மகிழ்ச்சி கிடைத்துவிடாது என்பதையும், மாறாக இயேசுவில் நிறைவையும் திருப்தியையும் காண்பதிலேயே உண்மையான மகிழ்ச்சி அடங்கியுள்ளது என்பதையும் உணர்ந்து கொண்டேன்." — ஃபிடிலிக்ஸ்.

"TOB முகாம் எனக்கு ஒரு அர்த்தமுள்ள மற்றும் புதிய தெளிவைத் தந்த அனுபவமாகும். உறவுகளைப் புனிதமான முறையில் எவ்வாறு கட்டியெழுப்புவது என்பதையும், அன்பின் உண்மையான அர்த்தத்தையும் புரிந்து கொள்ள இது எனக்கு உதவியது.

உண்மையான அன்பிற்கும் சிற்றின்ப ஆசைக்கும் (lust) உள்ள வித்தியாசத்தை நான் அறிந்து கொண்டேன். நாம் அன்பு செய்யவும், அன்பைப் பெறவுமே படைக்கப்பட்டிருக்கிறோம் என்பதை உணர்ந்தேன். முக்கியமாக, வாழ்க்கையின் நோக்கம் தற்காலிக மகிழ்ச்சியைத் தேடுவது மட்டுமல்ல, புனிதத்தன்மை மற்றும் அன்பின் வழியாக ஆழமான, அர்த்தமுள்ள மகிழ்ச்சியைக் கண்டடைவதுதான் என்பதைப் புரிந்து கொண்டேன்." — ஆஞ்சலினா மேரி.

"கடவுள் நம் ஒவ்வொருவருக்கும் அளித்த மிகப்பெரிய கொடைகளில் ஒன்றான 'சுதந்திரம்' பற்றிய ஒரு புதிய பார்வையை எனக்குக் கொடுத்தது. பிறருக்கு அன்பு காட்டவும், நம்மையே பிறருக்கு ஒரு சுயநலமற்ற பரிசாக அளிக்கவும் நமக்குச் சுதந்திரம் கொடுக்கப்பட்டுள்ளது என்பதை நான் கற்றுக் கொண்டேன்.

நமக்கு மகிழ்ச்சி தருவதை எல்லாம் செய்வதே சுதந்திரம் என்று நாம் நினைத்தாலும், அதற்கு பின்னால் ஒரு ஆழமான அர்த்தம் உள்ளது என்பதை உணர்ந்தேன். உண்மையான சுதந்திரம் என்பது நன்மையையும் நீதியையும் தேர்ந்தெடுப்பதே ஆகும்; அதுவே நம்மை இறைவனுக்கு நெருக்கமாகக் கொண்டு சேர்க்கிறது." — தனுட்டா ஆன்.

"TOB நமது உடலை மதிக்கவும் புரிந்து கொள்ளவும் வேண்டியதன் முக்கியத்துவத்தைக் கற்றுத் தந்தது. ஒரு ஆரோக்கியமான உறவை எவ்வாறு அடையாளம் காண்பது, அதற்கான சரியான எல்லைகளை எவ்வாறு அமைத்துக் கொள்வது என்பதைப் புரிந்து கொண்டேன்.

மேலும், உண்மையான உறவுகள் மரியாதை, நம்பிக்கை மற்றும் அக்கறையின் மீதுதான் கட்டியெழுப்பப்பட வேண்டும் என்பதையும் உணர்ந்தேன். மிக முக்கியமாக, இந்த போதனைகள் ஆரோக்கியமான உறவுகள் மூலம் நாம் எவ்வாறு சிறந்த மற்றும் பொறுப்புள்ள மனிதர்களாக வளர முடியும் என்பதைக் காட்டின." — ஷைனா அஷ்மிதா ஆன்.

"நாம் எவ்வாறு நமது வாழ்க்கையை மாற்றி, ஆன்மீக வாழ்க்கை முறையை நோக்கி வளர முடியும் என்பதை TOB முகாம் எனக்குக் கற்றுத் தந்தது. பிறரைக் கெட்ட எண்ணங்களோடு பார்க்கக்கூடாது என்றும், வெளித்தோற்றத்தை வைத்து அவர்களை மதிப்பிடக் கூடாது என்றும் கற்றுக் கொண்டேன்.

அதற்குப் பதிலாக, எல்லாரையும் அன்போடும், மரியாதையோடும், புரிதலோடும் பார்க்கவும் நடத்தவும் பழகிக் கொள்ள வேண்டும்." — எலிஷா ஆன்.

"விவிலியத்தை (Bible) தினமும் அதிகாரம் அதிகாரமாக வாசித்து, கடவுள் அன்றாடம் நமக்கு என்ன சொல்கிறார் என்பதைத் தியானிப்பதன் மூலம் உண்மையான மகிழ்ச்சியைக் கண்டடைவது எப்படி என்று TOB முகாம் எனக்குக் கற்றுத் தந்தது.

உண்மையான மகிழ்ச்சி என்பது தற்காலிகமானதோ அல்லது மறைந்துபோகும் சாதாரணமானதோ அல்ல என்பதை அறிந்து கொண்டேன். மாறாக, அது நம்மிடம் நிலைத்திருக்கும் ஒரு ஆழமான மகிழ்ச்சி. கடவுள் வழியில் நிலையான மகிழ்ச்சியைத் தேட இந்த அனுபவம் என்னை ஊக்குவித்தது." — டெட்மண்ட் தாமஸ்.

ஒவ்வொருவரின் கதையும் நமக்கு ஒரு புதிய பார்வையைத் தந்ததுடன், முகாம் முழுவதும் நாம் கற்றுக் கொண்ட பாடங்களை நினைவூட்டியது.

உண்மையான அன்பு, ஆரோக்கியமான உறவுகள், நமது வாழ்வின் நோக்கம், உண்மையான சுதந்திரம் மற்றும் இறைவனில் நிலைத்திருக்கும் மகிழ்ச்சி என ஒவ்வொரு போதனையும் நாம் வீட்டிற்கு எடுத்துச் செல்லக்கூடிய ஒரு சிறந்த வழிகாட்டியாக அமைந்தது.

— தனுட்டா, படிவம் 4

இறையாட்சி ஏற்ற முறையில் செயல்படுபவர்களுக்கு கொடுக்கப்படும்!

எசாயா 5: 1-7; பிலிப்பியர் 4: 6-9
மத்தேயு 21: 33-44

ஆண்டின் பொதுக்காலம் 27ஆம் ஞாயிறு

இன்றைய நற்செய்தியில், இயேசு உவமையின் மூலம் குருக்களிடமும் மூப்பர்களிடமும் பேசுகிறார். இந்த உவமையில், ஒரு நிலக்கிழார் தனது திராட்சைத் தோட்டத்தைக் குத்தகைதாரர்களிடம் விட்டுவிட்டு, அவர்களுக்குரிய விளைச்சலின் பங்கைப் பெற்று வரத் தனது பணியாளர்களை அனுப்புகிறார். பலமுறை பணியாளர்கள் அனுப்பப்பட்டாலும், ஒவ்வொரு முறையும் குத்தகைதாரர்கள் அவர்களை அடித்து உதைத்துக் கொன்றுவிடுகிறார்கள். இறுதியாக, நிலக்கிழார் தனது சொந்த மகனையே அனுப்ப முடிவு செய்கிறார். ஆனால் அந்தக் குத்தகைதாரர்களோ, "வாரிசு இல்லையென்றால் இந்தத் தோட்டம் நமக்கே சொந்தமாகிவிடும்" என்று தவறாகக் கணக்குப்போட்டு, நிலக்கிழாரின் மகனையும் சதி செய்து கொன்றுவிடுகிறார்கள்.

இந்த உவமையைக் கூறிய பிறகு, இயேசு தலைமைக்குருக்களிடமும் மூப்பர்களிடமும், "அந்த நிலக்கிழார் அந்தப் பொல்லாத குத்தகைதாரர்களை என்ன செய்வார்?" என்று கேட்கிறார். அதற்கு அவர்கள் அனைவரும், "அந்தக் கொடியவர்களை நிலக்கிழார் கொன்றொழித்துவிட்டு, உரிய காலத்தில் விளைச்சலின் பங்கைக் கொடுக்கக்கூடிய புதிய குத்தகைதாரர்களிடம் நிலத்தை ஒப்படைப்பார்" என்று ஒரே குரலில் பதிலளிக்கிறார்கள்.

இந்த உவமையைக் கூறும்போது, இயேசு எசாயா 5:1-7 பகுதியிலிருந்தே கருத்துகளைக் கையாண்டுள்ளார் என்பது தெளிவாகிறது (இதுவே இன்றைய முதல் வாசகமாகவும் உள்ளது). குருக்களும் மூப்பர்களும் இந்த மறைநூல் பகுதியை நன்றாக அறிந்திருந்திருப்பார்கள். எனவே, இயேசு இந்த உவமையின் அடையாளங்களை அவர்களுக்கு விளக்க வேண்டிய அவசியமிருக்கவில்லை. திராட்சைத் தோட்டம் என்பது இஸ்ரயேல் மக்களை குறிக்கிறது என்பதையும், நிலக்கிழார் என்பது கடவுளைக் குறிக்கிறது என்பதையும், பணியாளர்கள் என்பது இறைவாக்கினர்களைக் குறிக்கிறது என்பதையும், பொல்லாத குத்தகைதாரர்கள் என்பது சமயத் தலைவர்களைக் குறிக்கிறது என்பதையும் பரிசேயர்கள் எளிதில் புரிந்து கொண்டிருப்பார்கள்.

இருப்பினும், இயேசு இந்த உவமையின் ஆழமான அர்த்தத்தை அவர்களுக்கு உணர்த்துகிறார்: "கடவுளின் ஆட்சி நம்பிக்கையற்றவர்களிடமிருந்து பெறப்பட்டு, உண்மையாய் வாழும் மக்களுக்குக் கொடுக்கப்படும்." இயேசுவின் கேள்விக்கு அளித்த பதிலின் மூலமாகவே தலைமைக்குருக்களும் மூப்பர்களும் தங்களுக்குத் தாங்களே தண்டனைத் தீர்ப்பை அளித்துக் கொண்டார்கள்.

இயேசுவின் போதனைகளை ஆபத்தானதாகக் கருதிய யூத சமயத் தலைவர்களுக்கும், இயேசுவிற்கும் இடையே நாளுக்கு நாள் அதிகரித்து வந்த முரண்பாடுகளை இந்த நற்செய்தி தெளிவாகக் காட்டுகிறது. மத்தேயு நற்செய்தி இயேசுவின் இறப்பிற்குப் பிறகு சுமார் 70 ஆண்டுகள் கழித்து எழுதப்பட்டதாகும். எனவே, மத்தேயு எந்தக் கிறிஸ்தவ சமூகத்திற்காக எழுதினாரோ, அந்தச் சமூகத்தில் நிலவிய முரண்பாடுகளையும் பதற்றங்களையும் இது பிரதிபலிக்கிறது. மத்தேயுவின் சமூகத்திற்கும் அவர்களின் யூத அண்டை வீட்டாருக்கும் இடையே இருந்த பதற்றத்தை இன்றைய வாசகத்திலும் நாம் உணர முடியும் என்று பல மறைநூல் அறிஞர்கள் நம்புகின்றனர்.

கடவுளின் வார்த்தையைக் கவனமாகக் கேட்க வேண்டியதன் முக்கியத்துவத்தை இந்த நற்செய்தி நமக்கு நினைவூட்டுகிறது. மறைநூல் வாசகங்கள் வழியாகவும், நமது திருஅவையின் பாரம்பரியம் மற்றும் போதனைகள் வழியாகவும், இன்றைய காலக் கட்டத்தில் நம்மிடையே வாழும் இறைவாக்கினர்கள் வழியாகவும் கடவுள் நம்மிடம் பல வழிகளில் பேசுகிறார்.

இத்தகைய தூதர்கள் வழியாகக் கடவுள் நமக்கு அளிக்கும் வார்த்தைகளை நாம் கவனத்தோடும், திறந்த மனதோடும் ஏற்றுக் கொள்கிறோமா?

பெர்சியுஸ் ஜேம்ஸ்

→

ஒருவர் பேசுவதற்கும், மனம் திறந்து பகிர்ந்து கொள்வதற்கும் நேரம் குறைந்து வருகிறது. இதன் விளைவாக குடும்ப உறவுகளில் இடைவெளி, புரிந்துகொள்ளாமை, தனிமை போன்ற அனுபவங்கள் ஏற்படலாம்.

மேலும், தனிப்பட்ட செப வாழ்க்கை குறையும்போது, மனிதருக்கும் இறைவனுக்கும் இடையிலான உறவிலும் ஒரு இடைவெளி உருவாகலாம். அந்த இடைவெளி நமது குடும்ப உறவுகள், சமூக உறவுகள் மற்றும் அன்றாட வாழ்க்கையிலும் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும். குறிப்பாக இன்றைய இளம் தலைமுறையினர் பல்வேறு தகவல்கள், சமூக ஊடகங்கள், படிப்புகள், வேலை, எதிர்காலக் கவலைகள் என தொடர்ந்து பல எண்ணங்களுக்குள் வாழ்கின்றனர்.

டிஜிட்டல் உலகில் கிடைக்கும் அளவற்ற தகவல்கள் மனதை எப்போதும் சுறுசுறுப்பாக வைத்திருக்கின்றன. இதனால் அமைதியாக அமர்ந்து இறைவார்த்தையை வாசித்து, தியானித்து, இறைவனோடு தனிப்பட்ட உறவை வளர்த்துக்கொள்வது சவாலாகி வருகிறது.

குடும்பங்களையும் இளைஞர்களையும் குறை கூறுவதற்குப் பதிலாக, அவர்களின் தற்போதைய வாழ்க்கைச் சூழ்நிலையைப் புரிந்துகொண்டு, அவர்களுடன் பயணிக்கும் ஒரு செவிமடுக்கும் திருஅவையாக நாம் இருக்க வேண்டும். இறைவார்த்தையை மீண்டும் வாசிக்கவும், அமைதியாக தியானிக்கவும், தனிப்பட்ட செப வாழ்க்கையை வளர்த்துக்கொள்ளவும், இயேசுவோடு தனிப்பட்ட உறவை ஆழப்படுத்தவும் இறைமக்களுக்கு திருஅவை வழிகாட்ட வேண்டும்.

குடும்பங்கள் ஒன்றாகச் செபிப்பதற்கும், மனம் திறந்து பேசுவதற்கும், ஒருவரையொருவர் செவிமடுப்பதற்கும், இறைவனோடு உறவை வளர்த்துக்கொள்வதற்கும் திருஅவை புதிய வாய்ப்புகளையும் வழிகளையும் உருவாக்க வேண்டும். குறிப்பாக இளைஞர்களுக்கு, "இயேசுவை அறிதல் என்பது வெறும் சமய அறிவைப் பெறுவது அல்ல; அவரோடு தனிப்பட்ட உறவை உருவாக்குவதாகும்" என்பதை அனுபவத்தின் வழியாக உணரச் செய்ய வேண்டும். – பெர்சியுஸ் ஜேம்ஸ்

பங்குச் செய்திகளை அனுப்ப அழைக்கிறோம்

உங்களின் கட்டுரைகள், கருத்துக்கள், பகிர்வுகள், பங்குச் செய்திகளை நாங்கள் பெரிதும் வரவேற்கிறோம். 400-500 சொற்களுக்குள் அமைந்த கட்டுரைகள், அவற்றுக்கான விளக்கக் குறிப்புகளுடன் (caption) கூடிய உயர் தெளிவுத்திறன் (HD) கொண்ட JPG அல்லது PNG வடிவத்திலான புகைப்படங்கள் ஆகியவற்றை அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

உங்களது கட்டுரைகளை பின்வரும் மின்னஞ்சல் முகவரிக்கு அல்லது வாட்ஸ்அப் எண்ணிற்கு அனுப்பி வைக்கலாம்:

மின்னஞ்சல்: tamil@herald.com.my வாட்ஸ்அப்: 012-5599015